**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன் – மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் சமூக பாதுகாப்பு திட்டங்களை 2011–2012 ஆம் நிதியாண்டில் தொடர்ந்து செயல்படுத்திட– ரூ.1.00 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.17 நாள்: 22–02–2012

மாசி 10, திருவள்ளுவர் ஆண்டு 2043

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.11, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை (மாதிந.2.1) துறை, நாள் 15.2.2011.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண்.4241/த.மா.தி.3.வா/ 2011, நாள் 31.10.2011.

–––––––

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 2010–2011 ஆம் நிதியாண்டிற்கு சமூக பாதுகாப்பு திட்டங்களுக்கென ரூ.85.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கியும் மற்றும் 2009–2010 ஆம் ஆண்டு நிர்வாக செலவினங்களுக்கென ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.15.00 இலட்சத்தில், செலவிடப்படாமல் உள்ள மீதி தொகையான ரூ.7,97,222/– உடன் ரூ.7,02,778/– சேர்த்து நிதி ஒப்பளிப்பு வழங்கியும், ஆக மொத்தம் 2010–2011 ஆம் ஆண்டில் நிர்வாகச் செலவுகளை மேற்கொள்ள ரூ.15.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியும் ஆணையிடப்பட்டது.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், மேலே–2ல் படிக்கப்பட்ட தமது கடிதத்தில், 2010–2011 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படும் சமூக பாதுகாப்பு திட்டங்களுக்கு ரூ.1.00 கோடி மட்டும் செலவிடப்பட்டது என்றும், இத்தொகையினை, தன்வைப்பு கணக்கின் கீழ் வரைவு வைக்கப்பட்டு, செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது என்றும், இதன்படி ரூ.85.00 இலட்சம் சமூக பாதுகாப்பு திட்டங்களுக்கு செலவிடப்பட்டது என்றும், நிர்வாக செலவின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.15.00 இலட்சத்தில், ரூ.90,885/– மீதி உள்ளது என்றும் தெரிவித்து 2011–2012ஆம் நிதியாண்டில் சமூகபாதுகாப்பு திட்டங்களுக்கென ரூ.1.00 கோடியினை செலவு செய்திட அரசின் அனுமதி கோரியுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 2011–2012ஆம் நிதியாண்டில் மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் மூலம் பல்வேறு சமூக பாதுகாப்பு திட்டங்களை செயல்படுத்திட ரூ.90.00 இலட்சமும் (ரூபாய் தொண்ணூறு இலட்சம் மட்டும்) மற்றும் நிர்வாகச் செலவுகளுக்காக ரூ.10.00 இலட்சம் என மொத்தம் ரூ.1.00 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்–101–மாற்றுத் திறனாளிகள் நலன் –பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II–மாநிலத் திட்டம் – ME – மாற்றுத் திறனாளிகளுக்கான நல வாரியத்திற்கு மானியங்கள்–09– உதவித் தொகை 03–குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை
(த.தொ.கு..2235–02–101–ME-0936)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் கூட்டத்தில் வைக்கப்பட்டு அதன் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே, செலவினம் மேற்கொள்ளுமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்திற்கு பணமாக வழங்கப்படாமல் இவ்வாரியத்தின் உறுப்பினர் செயலர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் பெயரிலான பின்வரும் தன்வைப்பு கணக்கில் காசோலை / வரைவோலை மூலம் எதிர்வரவாக வரவு வைக்கப்பட வேண்டும்:–

K வைப்பீடுகளும் முன்பணங்களும் (b) வட்டியில்லா வைப்பு தொகைகள் 8443.00 உரிமையியல் வைப்பீடுகள் 800 இதர வைப்பீடுகள் DW தமிழ்நாடு ஊனமுற்றோர் நல வாரியத்திற்கான வைப்பீடுகள்.
DPC 8443 00 800 DW 000C (வரவுகள்)
DPC 8443 00 800 DW 0008 (செலவுகள்)

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 3675/நிதி(சந)/2012, நாள் 17.02.2012–ன்படி அத்துறையின் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்,சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/ அனைத்து மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள் / அனைத்து தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரிய உறுப்பினர்கள். (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/35(பெயரில்)
மாநில கணக்காயர், சென்னை– 9/18/35

<u>நகல்:–</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதி (சமூக நலம்)த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.